# குணம்



சோதியர்வளவு, பொலிகண்டி, வல்வெட்டித்துறையை
பிறப்பிடமாகவும்
169/2, திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலையை
வதிவிடமாகவும் கொண்டவரான

**அமரர் கலாபூஷணம் சி.என்.துரைராசா J.P**

அவர்களின் இறைபதப் பேறு குறித்த
நினைவு மலர்

27.02.2019.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமர்ப்பணம்


அன்பும் பண்பும் அறிவும் மிகுந்து
பொதுவாழ்வில் பெருமனதாய் ஈடுபட்டு
எல்லோரும் போற்ற வாழ்ந்து
புகழ்மிக்க பெருந்தகையாகி
மனிதருள் மாணிக்கமாய்
பண்பின் சீலராய்
பாசமிகுந்த தந்தையாய்
மதிப்பிற்குரிய மாமனாராய்
பெருமைக்குரிய பேரனாய்
அன்புக்குரிய நண்பராய்
கருணை மிகுந்த வள்ளலாகவும் வாழ்ந்து
இவ்வுலக வாழ்வு போதுமென
இறைவன் அழைக்க விரைந்த
எம் குடும்பத்தின் ஒளிவிளக்கே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டி
இம்மலரை காணிக்கையாக
சமர்ப்பிக்கின்றோம்

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலர்வு
1943.07.15

உதிர்வு
2019.01.28

# அமரர்
# கலாபூஷணம் சி.என்.துரைராசா J.P

திதி நிர்ணய வெண்பா


சேர்வருடம் ஏவிளம்பி சீர்தமிழ் தைத்திங்கள்
ஓர்அபரம் அஷ்டமியில் ஊர்விடுத்த - சீர்கலைஞன்
நல்லதோர் பண்பாளன் நடராஜா துரைராஜா
வல்லசிவன் பதமுற்றார் விரைந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




50வது திருமணநாளில் துணைவியாருடன் (10.06.2018)



அவர் பெற்ற விருதுகளுடன் மகிழ்ந்திருந்த வேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
*சிவமயம்*

# பஞ்சபுராணம்

## *விநாயகர் துதி*

*திருச்சிற்றம்பலம்*

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடி கணபதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந்
தன்மையினாற் கண்ணிற் பணிமின் கனிந்து.

### *தேவாரம் 1*

பித்தாபிறை சூடிபெரு மானே அருளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அத்தாஉனக் காளாயினி அல்லேலென லாமே.

### *தேவாரம் 2*

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உண் மெலிவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருவாசகம்**

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கட லுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்று அருள் புரியாயே.

**திருவிசைப்பா**

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

**திருப்பல்லாண்டு**

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற
தில்லைச் சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

**பெரிய புராணம்**

ஆதியாய் நடுவுமாகி அளவிலா வளவுமாகிச்
சோதியாய் யுணர்வுமாகி த் தோன்றிய பொருளுமாகி
பேதியா வேகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியாய் நிற்கும் தில்லை பொதுநடம் போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருப்புராணம்

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனமுக னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம்.

### திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமாதான சற்குண நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

### வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிபடும் ஆலய தெய்வங்களை வேண்டுதல்

### திருமலை பத்திரகாளி அம்மன் துதி

பத்திரகாளி என்றால் புதுமையுள்ள தேவியவள்
வித்தகியே வருமடியார் வினைதீர வரம்தருவாய்
கொத்தாக வேப்பிலையை கரம்தாங்கும் அம்பாளே
உத்தமராம் தலைவனையே உம்பாதம் ஏற்பாயே

### திருமலை கற்பகப் பிள்ளையார் துதி

மாங்கனியை வென்ற மூத்த விநாயகனே
மூஞ்சூறு வாகனனே முதன்மை தத்துவனே
பாங்குடனே உனைப்பாடி பதிவிட்டு வருகின்ற
பாசமுள்ள அப்பாவை பொழுதெல்லாம் காப்பாயே

### திருமலை கோணேசர் துதி

கோணமலை உச்சியிலே கோலமுறு சிவனாரை
கரம்கூப்பி பாடிவரும் கையளவு கலைஞானி
பேணரிய செல்வங்கள் புலத்தினிலே புகழுரைக்க
பண்பான மாமாவை பத்திரமாய் குளிரவைப்பாய்

### திருமலை ஞானவைரவர் துதி

நன்றியுள்ள நாயாரை நீயுலவும் வாகனமாய்
நீலநிறம் கொண்டவனே நின்கரத்தில் சூலமுடன்
துன்பமுள வேளையிலே துணைபுரியும் வைரவரே
தவறாது துதிபாடும் தாத்தாவை பதியேற்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாபூஷணம் விருது



நீங்களும் எழுதலாம் ஆசிரியருடன்



விருதுடன்



மாகாண இலக்கியவிழாவில் கௌரவம்



விருதுடன்
உரையாற்றும்வேளை




மாகாண இலக்கியவிழாவில் விருது பெறும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழாவில் கௌரவிக்கப்பட்டபோது



அவர் பிறந்த சோதியர்வளவில் உறவுகளால் கௌரவிக்கப்பட்டபோது(11.09.2018)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சின்னத்துரை நடராஜா துரைராஜா (CN) அவர்களின் வாழ்க்கை வரலாறு

கடல்சூழ் இலங்கைத்தீவின் தலைபோல் திகழும் வடமராட்சியில் சோதியர்வளவு, பொலிகண்டியில் அமரர் அவர்கள் நடராஜா செல்லமுத்து தம்பதிகளுக்கு மூத்த மகனாக 15.07.1943இல் அமரர் நடராஜா துரைராஜா பிறந்தார். அவரின் பின் அமரர் விவேகானந்தன், தர்மகுலசிங்கம், விஜயலக்ஸ்மி ஆகிய பாசபிணைப்புகளான சகோதரர்கள் பிறந்தனர். அமரர் தனது ஆரம்பக்கல்வியை வதிரி வடக்கு மெதடிஸ்தமிஸன் கல்லூரியிலும் தொடர்ந்து திருகோணமலை சென்ஜோசப் கல்லூரியிலும் இடைநிலை கல்வியை தேவரையாளி இந்து கல்லூரியிலும் பயின்றார். பின்னர் 119/2 திருஞானசம்பந்தன் வீதி, திருகோணமலையை தனது வசிப்பிடமாக கொண்டு இருந்தார்.

*தொழில்நிலைக்குச் செல்லுதல்.*

1970ம் ஆண்டில் இலங்கை போக்குவரத்து சபையில் காப்பாளர் உத்தியோகத்தர் ஆக பதவி நியமனம் பெற்ற இவர் 1997ல் வீதிபரிசோதனை குழு தலைவராக பதவி உயர்வு பெற்று 2003ம் ஆண்டு 33 வருடகால சேவையின் பின் ஓய்வு பெற்றார் இவருடைய சேவைக்காலத்தில் பொதுமக்களிடமும், இலங்கை போக்குவரத்துச்சபை அதிகாரிகளிடமும் நன்மதிப்பை பெற்றதன் சான்றாக CTB ஆலயம், CTB அந்திமகால சேவைச்சங்கம், CTB நலன்புரிச்சங்கம் போன்றவற்றின் கௌரவ செயலாளராக பணியாற்றியது குறிப்பிடத்தக்கது.

*இல்வாழ்க்கைப் பயணச்சுவட்டில்,*

அவர் தனது மணப்பருவம் வரவே சோதியர்வளவு பொலிகண்டியை சேர்ந்த சொந்த மச்சாள் ஆன செல்வராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பதிகளின் இளையமகள் ஆன இராசகுமாரியை 10.06.1968ம் ஆண்டு கரம்பிடித்தார். இத்திருமண நிகழ்வில் தம்பதிகள் கூரையற்ற மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ஆடம்பர காரில் திருமலைநகரில் வலம் வந்த காட்சி இன்றும் பலரால் பேசப்படுகின்றது. இவ்வாறு இல்லற வாழ்க்கையை அன்போடும் அரவணைப்புடனும் நடத்தியதன் பேறாக மங்களநாயகி, குமணராஜன், ஜெயந்தி, பத்மராஜா, பாரதிராஜா, நிருஸிதா, கௌரிதரன் ஆகிய புதல்வர்கள், புதல்விகள் எழுவரை பெற்று கண்ணும் கருத்துமாக சீரும்சிறப்புமாக வளர்த்து கல்வியூட்டிவந்தார். மூத்த மகளான மங்கள நாயகியை மதியழகனுக்கு மணமுடித்து வைத்தார். அவர்கள ஜேர்மனியில் சிறப்பாக வாாழ்ந்து வைசாலி, விஸாலி இரு குழந்தைகளுடன் வாழ்வதை கண்டு இன்புற்றார். மூத்த மகன் குமணராஜாவை (துறைமுக அதிகாரசபை எழுதுவினைஞர்) மரியகியூரிக்கு மணமுடித்து திலஷ்சனா, லகீசா என இரு குழந்தைகளை கண்டு மகிழ்ந்தார். இரண்டாவது மகளான ஜெயந்தியை விமலதாஸ் என்பவரை மணமுடித்து ஸர்வேள், ரஸ்வேள் குழந்தைகளுடன் ஜேர்மனியில் வாழவைத்தார். இரண்டாவது மகனான பத்மராஜாவை (பவுணு நிறுவன சாரதி) ரெஜிதேவி என்பவருக்கு மணமுடித்து அபிமனுஸா, அனுசரன் ஆகியோரை கண்டு மகிழந்தார். மூன்றாவது மகனான பாரதிராஜாவை சொந்த மருமகளான சுகந்தியை மணமுடித்து வைத்து தனுவர்சாவை குழந்தை ஆக கண்டு மகிழ்ந்தார். மூன்றாவது மகளான நிருசிதாவை சுரேஸ்குமார் என்பவருக்கும் தனது நான்காவது மகனான கௌரிதரனை (I.O.I.C) நிறுவன கணக்காளர்) சிந்துஜாவை மணம்முடித்து நிறைவு கண்டார்.

***இலக்கிய பயணம்.***

அமரர் அவர்கள் பாடசாலையில் கல்விபயிலும் காலத்திலேயே தனது இலக்கிய பயணத்தை ஆரம்பித்திருந்தார். 1957 ம் ஆண்டு ஔவையார், குமணவள்ளல் எனும் நாடகங்களில் நடிக்க ஆரம்பித்து கரவெட்டியூர் அண்ணாச்சாமி ஆசிரியரின் நெறியாழ்கையில் பல நாடகங்கள் நடித்துள்ளார். 1967இல் திருமலை நாடக மன்றத்தில் ஆதவன், காகித பூக்கள், மஞ்சுளா என்பன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற இதுவரை 20 நாடகங்களுக்கு மேல் நடித்து பல விருதுகளையும் பெற்றுள்ளார்.

*கவிதை...*

1959ல் கல்வெட்டு எனும் கவிதையை முதல் கவிதையாக எழுத ஆரம்பித்தவர் 1000 கவிஞர்கள் கவிதைகள் உலகசாதனை புத்தகத்திற்கு எழுதியது வரை 300 கவிதைகளுக்கு மேல் எழுதினார். சமகாலத்தில் பல சிறுகதைகளையும் இலக்கியத்துறையில் பல விமர்சனங்களையும் தந்துள்ளார் இதன் உச்சக்கட்டமாக நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக 1990களில் நாட்டிலிருந்து குடும்பத்துடன் வெளியேறி இந்தியாவீல் அகதி முகாமில் வாழ்ந்தகாலத்தில் அங்கு பாலர்பாடசாலை, படிப்பகம் முதலான வற்றை தலைமை தாங்கி வழிநடத்தி சென்றதோடு இவர் இந்தியாவில் இருந்தகாலத்தில் இவருடைய வீடு உடைக்கப்பட்டு விலை மதிப்பற்ற புத்தகங்கள் அழித்தொழிக்கப்பட்ட ஈழத்தமிழர்களின் துயர்கண்டு நெஞ்சுபொறுக்குதில்லையே; என்ற கட்டுரையை எழுதியிருந்தார். இக்கட்டுரை இந்தியாவில் பல சஞ்சிகைகளிலும் பத்திரிகைளிலும் வெளியாகியதை வாசித்த அன்றைய தமிழ் நாட்டின் முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் "துளைக்கிறது நெஞ்சை துரைராஜாவின் கடிதம்" என்ற பதில் கடிதம் பத்திரிகையில் வெளியிட்டார். இது அமரர் அவர்களின் ஆற்றுகைக்கு கிடைத்த வெற்றி ஆகும். மீண்டும் 1993ம் ஆண்டு இவரும் இவர் குடும்பத்தினரும் தாயகம் திரும்பினர்.

*அரசியல் பயணம்...*

1965ம் ஆண்டில் தந்தை செல்வநாயகம் அவர்களின் ஆசியுடன் தமிழரசுக்கட்சியில் அங்கத்துவராக சேர்ந்து அவர்கள் 1979ல் திருமலை நகராட்சி மன்றத்தின் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு மக்களுக்கு ஆற்றிய சிறப்பான தொண்டு காரணமாக மீண்டும் 1983ம் ஆண்டில் நகராட்சி மன்ற தேர்தலில் நின்று வெற்றிபெற்று சாதனையும் படைத்தார். 1994ம் ஆண்டில் பாராளுமன்ற பொது தேர்தலில் இரா.சம்பந்தன் ஐயாவின் (பாராளுமன்ற உறுப்பினர்) நம்பிக்கைக்குரிய உறுப்பினராக போட்டியிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஆன்மீக பணிகள்...*

ஊஞ்சல் பாட்டு கவசம் எழுதிய கோவில்கள்

1. அருள்மிகு ஸ்ரீப்திரகாளி அம்மன் கவசம்,
2. அன்புவளிபுரம் ஞானவைரவர் ஊஞ்சல் பாட்டு
3. காந்தி நகர் அம்மன் ஊஞ்சல் பாட்டு
4. திருப்புகழ் மாலை எனும் நூலின் திருக்கோணேஸ்வரர் தமிழ் அர்ச்சனை

த5. திருமலை கற்பக பிள்ளையார் ஆலய ஊஞசல் பாட்டு

6. நல்லுஸர் கந்தன் திருவிழா கலங்களில் நாள்தோறும் நல்லூர் கந்தன் புகழ்பாடும் கவிதைகள்

நலம் தரவா நல்லூரானே. தேரேறி வாராய் நல்லூரானே.

*இவரின் ஆக்கங்கள் வெளிவந்த பத்திரிகையின் பெயர்கள்*

சுதந்திரன், வீரகேசரி, தினகரன், சுடரொளி, தினக்குரல் ஆகிய தேசிய நாளேடுகளிலும் சஞ்சிகைகளிலும் அதே நேரம் இந்தியாவின் எக்ஸ்பிரஸ், தினமணி, முரசொலி ஆகியவற்றிலும் பிரசுரம் ஆகி உள்ளது.

*அவரது புனைபெயர்கள்...*

திருமலை கலைமாறன், குணகௌரி, ஸ்ரீபழியார், சச்சிதுரை, பொலிகை மாறன்,

*அமரர் அவர்கள் பெற்ற விருதுகளில் சில*

8.11.2015 வித்தகர் விருது

8.12.2013 அன்புவளிபுரம் ஞானவைரவர் ஆலயத்தினரால் கவிஞர் விருது வழங்கப்பட்டது

2014 திருகோணமலை நகர முதல்வரால் வழங்கப்பட்ட கலாவித்தகர் விருது

15.12.2013 கலாபூசனம்

2013 நீங்களும் எழுதலாம் ஆசிரியரின் கௌரவிப்பு

01.08.2013 சாகித்திய விருது

2008 அருட்கவி திருகோணமலை பத்திரகாளி அம்மன் பிரதம குருவாக பிரம்மஸ்ரீ ரவிச்சந்திரக் குருக்கள் அவர்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்பட்டது.
2013 சமாதான நீதவான்

தனக்கென பல தனித்துவங்களை காண்பித்து பல துறைகளிலும் அறிவூற்று களஞ்சியம், குணத்தின் இமயமாக திகழ்ந்து உத்தமன் என்று எல்லோருக்கும் எடுத்துக்காட்டாக சொல்லும் படியாக வாழ்ந்து தனது வாழ்க்கையை வனப்பாக வடிவமைத்து வைத்துவிட்டு 6.10.2018 இல் தனது அன்புவளிபுர இல்லத்தில் உறவுகள் புடைசூழ 50வது நறைவு திருமணநாளை கொண்டாடி மகிழ்ந்து தான் பிறந்த மனையாம் சோதியர் வளவு பொலிகண்டியில் 11.09.2018 இல் மனைவி, பிள்ளைகள், உடன்பிறப்புகள், பிறப்பிடத்தின் உறவுகள் சுற்றம் சூழ மகிழ விழா கொண்டாடி மகிழ்ந்து அழியாத எச்சங்களோடு அரன்பாதம் சேர்ந்து அமரர் நடராஜா துரைராஜாவின் ஆத்மா சாந்தி அடைய இவைனை பிரார்த்திப்போம்


தொகுப்பு
**அ.அருளானந்தசோதி**
தபாலதிபர்
'சோதியர் வளவு' பொலிகண்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது அப்பாவின் கடைசி கையெழுத்து

ஒரு கவிஞன் தனது சிந்தையில் தோன்றுகின்ற எண்ணங்களை எழுத்து வடிவில் முன் நிறுத்துகின்றான். அவை தன்னைப் பற்றியோ அல்லது பிறரைபற்றியதாகவோதான் இதுவரைகாலமும் நாம் படித்திருக்கின்றோம். நடமுறையில் பார்த்திருக்கிறோம். ஆனால் ஒரு கவிஞன் தனக்கு தானே மரண அறிவித்தல் எழுதியதை கேள்விப்பட்டிருக்கவில்லை. ஆனால் இன்று அதை கேள்விப்பட்டிருக்கிறோம், உணர்ந்திருக்கிறோம். ஆம் எமது அப்பாவின் மரண அறிவித்தல் இவ்வாறுதான் இருக்க வேண்டும் என்று தனக்குத்தானே எழுதிய அந்த தொடக்கமான அறிவித்தல் இதோ...

*ஆக்கம்*
*கௌரிதரன்*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையறுநிலைப் பாக்கள்

### மனைவி பிரலாபம்

கொற்றையூர் மண்ணில் கருவாகி பதிநிமிர்ந்து
கற்றறிய சூரனார் கூடமதில் கால்பதித்து
பொற்றாலி எந்தனுக்கு பற்றோடு பூட்டியே
பிள்ளைச் செல்வங்கள் பேறாக பெற்றோமே
குற்றாலம் அருவிபோல் கலையுயர்ந்த திருமலையில்
காலபூசண விருதுடனே காணரிய கலையழகும்
பெற்றிருக்க நெற்றி பொட்டழித்து தவித்தேனே
பொன்னுடலும் போனவழி பிரிவை தாங்குவேனா.

### பிள்ளைகள் பிரலாபம்

திருமலை நகர்தன்னில் தேர்ந்தே வீடமைத்து
தேனாக உணவூட்டி தக்ககல்வியும் புகட்டி
குருவாக எமக்கிருந்து கணமறிந்து வழிகாட்டி
கருணை மொழியோடு கலைபலவும் சீரோங்க
பருவங்கள் தானறிந்து பெருமையுள்ள பந்தமதில்
பேறாக திருமணமும் புலமறிய வைத்தே
வருந்துகின்ற சோதியர் வளவோடு நாமுமாய்
வாழும்வரை உளமார வணங்கி எழுவோமே.

### மருமக்கள் பிரலாபம்

நீங்கள் வாழுமனை நாம்புகுந்த வேளையில்
நெஞ்சார வரவேற்ற நன்னாளின் நினைவலைகள்
தாங்கள் இன்றில்லை என்றாகிப் போனாலும்
தித்திப்பாய் கரம்பற்றி தேனாக வாழ்வதுவும்
பாங்குடைய செயலும் பண்பான உரைதானும்
பல்கலை கலைத்திறனும் பதிதுலங்கும் மாமாவே
ஏங்கித் தவிக்கின்றோம் எம்மனது தேறவில்லை
எம்மோடு கலையுள்ளம் என்றும் நினைந்துருகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் பிரலாபம்

மலைமீது கோபுரத்தின் மணியோசை செவிசேர
முன்னெழுந்து எமைத்தேடி மனைபுகும் தாத்தாவே
நிலையுயர அதிகாலை நெஞ்சுறுதி கொள்கையுடன்
நமதுதுயில் கலைந்தெழவே நிறைவான பணியோடு
கலைசார்ந்த கதைகூறி கற்றிடவும் வைப்பாயே
கோணமலை தெய்வங்கள் கோடியருள் தருமென்பாய்
சிலைவடிவ பெருமானின் சீர்சார்ந்த கீதங்கள்
சரித்திரமே எம்தாத்தா சாய்ந்தாலும் வாழ்வீர்கள்

## உடன்பிறந்த சகோதர, சகோதரிகள் பிரலாபம்

பேறுடைய நாமும் பெற்றோர்க்கு பிள்ளைகளாய்
பேனாவும் கரத்தினிலே ஆறாம் விரல்போல
கூறும் பெருமைக்கு கரும்பாய் ஆறுபேரும்
கூடியே வாழ்ந்திருக்க ஒரு பறவை முன்பிழந்தோம்.
நீறுதனை அணிந்து நலம்வேண்டி தொழுபவனே
நாளும்நீ துதிபாடி நீண்டதொரு வாழ்வினிலே
ஊறும்கலை நிலையுயர அண்ணாவே நீயுமின்றி
எமைப் பிரிந்தாயே என்றும் உனைமறவோம்.

## மைத்துனர், மைத்துனிமார் பிரலாபம்

வடக்கினிலும் கிழக்கினிலும் வளமார்ந்த கலையாவும்
விளைவித்த வித்தகனே விழிமூடி சென்றாலும்
திடமோடு எமையும் தேடிவந்து உரைப்பாயே
தக்ககலை வேந்தனே தேர்ந்த கலாபூசணமே
சுடரொளியே பகர்ந்து சேர்ந்த திருமலையில்
சாதனை பெருமைகளுக்கு சிந்தை சுமந்திருந்து
நடராஜா பெற்றெடுத்த நாடகமாம் துரைராஜா
நற்கலை பணியாவும் நதிபோல பாய்கிறதே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் பிரலாபம்**

உற்றார் இன்பமதில் உன்பாதம் தினம்பதியும்
உறவினர் அயலவர் துயரினில் பங்கிருக்கும்
பற்றோடும் பணிவோடும் சமூகமதில் முன்னின்று
பண்பான நணபனுமாய் கரம்பற்றி கொள்வாயே
நற்பணிகள் திருமலை நகரசபை உறுப்பினராய்
நாடகனாய் எழுத்துருவில் நிலைகண்ட கலைஞனே
அற்புதம் நிறைந்தவனே அன்புவழி புரமுனக்கு
அஞ்சலிகள் விழிநீரால் ஊரார்கூடி சொரிந்தோமே

**தேற்றம்**

மொட்டுகளும் இதழ்விரியும் மாலைவேளை உதிர்ந்துவிடும்
நட்டமரம் நிலையுயரும் நிச்சயமாய் சாய்ந்துவிடும்
கட்டுடலும் ஒருநாளில் காடுறைந்து போகும்
தெட்டத் தெளிந்தகதை தேறிடுவாய் மானுடனே

*ஆக்கம்:- "கலைமாமணி"*
*கே. ஆர். திருத்துவராஜா*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளின் உருக்கம்

## என் உதய சூரியன் தந்தை

என் தாயின் வயிற்றில் நான்
உதித்த நாள் முதல்
என் தாய் என்னை உங்கள் கையில்
கொடுத்த நாள் வரை
என்னை தங்கள் உயிரிலும் மேலாக
காத்த என் தந்தையே!
நான் இவ்வுலகில் வாழ்வதற்கு
காரணமாய் இருந்த கர்த்தாவே!
இன்று உம்மை பிரிந்து சோகத்தால்
கண்கலங்கி நிற்கின்றேன் ஐயா!
கண்ணுக்குள் கண்ணாக நிற்கின்றீர்
கண்ணிமைக்க யோசிக்கின்றேன் என் ஐயா!
காலம் தான் பிரித்தது நம் உடலை மட்டுமே
காலம் காலமாய் பிரியாது நம் அன்பு ஐயா!
மீண்டும் கண் கலங்கி அழைக்கின்றேன்
அப்பா! அப்பா! அப்பா! அப்பா

ஆக்கம்
**மகள் சு.நிருசிதா (நிசா)**

## வரமருள்க தந்தையே!

காலன் கணக்கு
முடித்து விட்டு
ஒரு கவிஞன்
மறைந்து போனான்
ஞாலம் முழுவதையும்
கவிதையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளந்தவனை
காலன் கவர்ந்து போனான்
இப்படி சொல் விதையை
விதைத்து
சோகத்தை அறுத்தெறிய
முடியவில்லை!
செத்துப்போயினார் என்ற
தேறவும் இல்வில்லை
தந்தையாய் பூத்து
மாமனாய் காய்த்து
பேரனாய் கனிந்தவரை
படிப்படி மறந்து தொலைந்து
உறங்கும் மனசு?
கலாவித்தகராகி
அருட்கவி பொழிந்தவரை
காளியம்மானே நீ
கவர்ந்து போன
காரணம் என்ன?
பொலிகண்டியில் மலர்ந்து
திருமலையில் வாழ்ந்தவரை
கோணமலையானே
கொள்ளையிட்டுப் போனதென்ன?
அன்பூறும் வார்த்தைகளால்
எமைவளர்த்து கஆளாக்கி
பண்பாளராக எமையிந்தபாரினிலே
உயரவைத்த தந்தையே!

பெற்ற கடன் தீர்க்க முன்னர்
போய்விட்டீர் உத்தமரே
பொற்சுண்ணம் இடித்து
பூதவுடலுக்கு கொள்ளியிட்டு
அஸ்தியை அலையென்றும்
கடலில் கரைத்ததை தவிர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தனுக்கு நீங்கள் இட்ட பணி
வேறேதும் இல்லையப்பா!
அதிர்ந்து பேசாத குணமும்
அன்பு குறையாத மனசும்
தெளிந்த ஞானச் செருக்கும்
உங்களைப் போலவே
எங்களுக்கும் வரும்படியாக வரமொன்றை
அருள்க தந்தையே!
இனி சந்திப்போம் என்பது
சாத்தியம் இல்லையென தெரிந்தும்
உங்களை காணத்தவிக்கும்
எங்கள் மனசுகளுக்கு ஏதேனுமொரு வார்த்தை
கூறிவிட்டு உறங்குங்கள்
அப்பா!

குணராஜா குடும்பம்

**வரம் வேண்டும் வரவேண்டும் என்பிள்ளையாக**

தெய்வங்கள் எல்லாம் தோற்றே போகும் - எம்
தந்தை அன்பின் முன்னே....

அன்பும் அறமும் அடக்கமும் கொண்டவரே
அகம்பாவம், ஆணவம் அற்றவரே
நொடிபொழுதில் உதவும் குணம் கொண்டவரே
கோபங்கள் பொறாமைகள் அற்றவரே
முகத்தில் புன்சிரிப்பும் நெற்றியில் விபூதி பொட்டும்
கையில் பேனாவும் மனதில் கலையம்சமும் கொண்டவரே
வாயில் மென்மை பேச்சும் வயிற்றுக்கு மென்மை சாப்பாடும்
உடுப்பதே வேட்டி நீ போபோதும் வேட்டியே அப்பா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூஷணனே அருட்கவியே, வித்தகரே
செல்லமுத்து பெற்றெடுத்த கலையின் சொத்தே
பல்வேறு புனைபெயர் கொண்ட நீங்கள்
குணகௌரி என்ற பெயரை வைத்து என்னை
உம்மோடு சேர்த்த என் அன்பு காவியமே
தந்தை மகன் அன்பின் அடையாளத்தின்
உச்சமே இது தானே அப்பா!

பட்டம் ஒன்று பெற்றேன் அப்பா உன்னால்
அந்த ஒரு பட்டத்துக்கே ஆயிரம் மகிழ்ச்சிகள்
ஆனால் உன் பெயருக்கு பின்னால் எத்தனை பட்டம்
சொல்லமனம் நெகிழ்கிறது உன்னை என் அப்பா
என்று சொல்ல மனம் பூரிப்படைகிறது.

தாய்க்கு தாயாக தந்தைக்கு தந்தையாக
என்னிடம் இருந்தாயே அதேபோல்
உன் கடைசி மருமகளிடமும்
மாமாவுக்கு மாமாவாகவும் அப்பாவுக்கு அப்பாவாகவும்
இருந்து எம்மை ஆசிர்வதித்தாயே
உன் கடைசி நொடிகளும் எம்மோடு தானே அப்பா
கழித்தாயே அப்போது தெரியவில்லை
அதுதான் கடைசி நொடி என்று

காலங்கள் மாறும் ஆனால் உன் அன்பு எப்போதும்
எம்மைவிட்டு மாறாது. உடல் பிரிந்தது உலகை விட்டு
ஆனால் உன் உயிர் பிறக்கவேண்டும்
என் பிள்ளையாக வருவாயா அப்பா என்னோடு

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

ஆக்கம்
கௌரிதரன்
சிந்துஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோள்களில் சுமந்து உலகை காட்டுபவர் தந்தை

அன்னை வயிற்றில் பத்து மாதங்கள் நம்மை சுமந்தாலும் ஆயுள் வரை நெஞ்சில் சுமப்பவர் தந்தை. நம்மை இந்த உலகிற்கு கொண்டு வந்த அன்னை அறிமுகப்படுத்தும் முதல் நபர் அப்பா. எட்டி உதைத்த கால்களை கட்டி அணைத்து முத்தமிட்டு பூரித்து போவார்.

தந்தை என்பவர் ஒரு குடும்பத்தைக் கட்டி எழுப்புகிறார் வாழ்க்கைச் சக்கரத்தில் நாம் வசதியாக வாழ்வதற்காக ஓயாமல் சுழலும் அன்புச் சக்கரம். நாம் துயிலெழமுன் வேலைக்கு சென்று நாம் தூங்கிய பின் வீடு திரும்பும் தன்னலமில்லா உள்ளம். அப்பா என்ற வார்த்தையில் எத்தனை மந்திரங்கள். தந்தை என்பவர் ஆயிரம் ஆசான்களுக்கு சமம். ஆலோசனை, அனுபவ பாடங்களை சொல்வதில் சிறந்த வழிகாட்டியாக தந்தை சொல்மிக்க மந்திரமில்லை எனும் வார்த்தையில் எவ்வளவு உண்மை உழைப்பு, சேமிப்பு, தன்னம்பிக்கையின் ஊற்று தந்தை என்றால் மிகையாகாது. பிரசவ அறை தொடங்கி கல்லூரி சேர்க்கும் வரை கால்கடுக்க காத்திருப்பவர் தந்தை. தம் வாழ்வின் கந்தை சட்டையும், பனியனுமே அணிந்திருப்பார். தமக்கு ஆடைவாங்கும் போது விலையையும் குழந்தைக்கு வாங்கும் போது தரத்தையும் பார்ப்பார். அப்பாவின் அன்பு அழகானது. சில சமயங்களில் ரகசியம் ஆகிவிடுகின்றது. தந்தையிடமிருந்து கோபம், கண்டிப்பு இருந்தாலும் அவை தான் எதிர்கால வாழ்க்கைப் பாடம். இதனால் கண்டிப்பானவர் வளைந்து கொடுக்காதவர் என்று பெயர். பிள்ளைகள் சாப்பிடாமல் தூங்கினால் எழுப்பி சாப்பிட வைத்து மீண்டும் தூங்க வைப்பார். பிள்ளையின் தூக்கத்தில் தந்தையின் அன்பு மறைந்திருக்கும் தன் குழந்தைகளை பற்றி பிறரிடம் பெருமையாக பேசி மகிழ்ச்சி கொள்வார். அப்பாவின் கை பிடித்து நடக்கும் அனுபவம் கோடி ரூபாய்க்கு ஈடாகாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் துவண்ட போதும் நான் இருக்கின்றேன் எதற்கும் கவலைப் படாதே எனும் நம்பிக்கை தருபவர். பிள்ளைகளுக்கு நிழலாக இருப்பார் தன் குழந்தைகளுக்கு பிரச்சனைகளை எதிர்கொண்டு போராடும் எதிர்நீச்சலை கற்றுதருகிறார். வாழ்க்கையில் ஒவ்வொரு தந்தையும் பிள்ளைகளை ஆளாக்க அவர் பட்ட கஸ்டங்கள் கண் கலங்க வைக்கும். தான் படிக்காவிட்டாலும் பிள்ளைகள் படித்து பெரிய ஆளாக வேண்டும் என்று கனவுகாண்பார். அவரின் வியர்வை துளிகளை பிள்ளைகளின் வளர்ச்சிக்கு உரமாக்குவார். எத்தனையே இன்னல்கள் வந்தாலும் வெளிக்காட்டாமல் துன்பத்தின் சாயல் பிள்ளகைள் மீது படாமல் தன் தோள் மீது சுமப்பவரே தந்தை. தன் பிள்ளைகள் தன்னை விட உயர்ந்த நிலைக்கு செல்ல வேண்டும் என்று தோள் சுமந்து உலகை காட்டுபவர்.

வெடிப்பு விழுந்திருக்கும் பாதங்களில், நரம்பு தெரியும் கைகளில், நரை விழுந்த தலை முடியில் அப்பாக்களின் உழைப்பு தெரியும் தன் மகனை வளர்த்து பெரியவனான பிறகும் சிறுபிள்ளையாகவே பார்க்கிறார். நான் பட்ட கஸ்டம் பிள்ளைகள் படக்கூடாது என பாடுபடும் தந்தைக்கு நாம் கொடுக்கும் விலை மதிப்பற்ற அன்பான வார்த்தைகளே.

ஆக்கம்
**மகன்**
**து.பாரதிராஜா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சகோதர சகோதரிகள் புலம்பல்

தாய்க்கு தலைமகனாம் எங்கள் அண்ணாவே
தந்தையை இழந்த எமக்கு தந்தையானீர்
எம் தாய்க்கு பக்கபலமாய் இருந்தீர்
வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த பெருமகனே
காயமிது பொய்யென காலனிடம் சென்றீரோ
இமையமென வாழ்ந்து நின்ற எங்கள் தர்மத்தலைவனே
சுமைதாங்கியாய் நின்று எம்மை வளர்த்த வளர்பிறையே
இல்லம் தன்னில் ஒளியுமில்லை இனியவரே நீருமில்லை
ஒரு கூட்டுப்பறவையாய் ஒற்றுமையாய் இருந்தோமே
இனி தம்பி தங்கையென உரையாட யார் வருவார்
விண்ணவர் அழைத்தாரோ வீறுநடை போட்டீரோ
கண்கலங்கி நிற்கின்றோம் எங்கள் கனிவான அண்ணாவே
தேடக்கிடையாத திரவியமே எங்கள் அண்ணாவே
ஆலமர நிழலை எண்ணி அருந்தவமாய் இருக்கின்றோம்
திருமலைக்கு கவிதைகள் பல கட்டுரைகள் பல
தந்த திருமலை கலைமாறனே
எத்தனையோ விருதுகள் பெற்ற
எங்கள் C.N அண்ணாவே
எங்கள் குணமான கலாபூஸணமே கற்பகதருவே
கலங்கி நிற்கின்றோம் சோதரர்கள் யாம்.

*ஆக்கம் சகோதரி*
*வி. யோகா*

### சகோதரி வயிற்று மருமக்கள் புலம்பல்

மாமா மாமா என்று கூறிநின்ற போதும்
அன்புவழிபுர மாமா என்று அடையாளமிட்டு
உங்களை அன்புடன் அழைத்து நின்றோம்
எங்கள் அன்பான அன்புவழிபுர மாமாவே
இனி எங்கே காண்போம் தங்களை
அன்பான மாமாவே அருள்மழையின் இருப்பிடமே
காணக் கிடையாத பொக்கிஸமே மாமாவே
கலங்கரை விளக்கமே எங்கள் மாமாவே
செத்து மடிந்தீர் என்ற செய்தி தன்னை
எம் சிந்தை இன்னும் ஏற்குதில்லையே மாமாவே

**துளசிகா விஜயலக்ஸ்மன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிஜங்களில் உங்களோடு

மண்ணில் மனிதனாகி
மானிடரில் தெய்வமாகி
இந்த மண்ணை விட்டு மறைந்து
சில நாட்கள் ஆனபோதும் எங்கள்
கண்களில் எல்லாம் ஒளியாகி கனவுகளில்
தினம் வந்து மனங்களிலும் நினைவுகளிலும்
மங்காது நிறைந்திருக்கும் தெய்வமாகிப் போன
எங்கள் தந்தை C.N துரைராஜா (குணம்) J.P
அவர்கள் நம்மை விட்டு பிரிந்த 31ம் நாளில்
அன்னாரின் சாந்திக்காக பிள்ளைகள் நாமெல்லாம்
ஆண்டவனை வேண்டி நிற்கிறோம்.
"அப்பா" நீங்கள் மண்ணில் மலர்ந்து... நல்ல
மனிதராக பெற்றோரோடும் உறவுகளோடும் வாழ்ந்த
சில காலங்கள்...! அன்பான கணவராக மனைவியோடு
வாழ்ந்த சில காலங்கள்...!
பின்னர் பிள்ளைகளை கண்போல காத்து வளர்த்த
சிலகாலங்கள்...!
பின்பு மருமகன்கள் மருமகள்களிடம் பாசமும் நேசமும்
காட்டி வாழ்ந்த சில காலங்கள்...!
இவற்றுக்கெல்லாம் மேலாக உங்கள் பேரன், பேத்தியர்களுடன்
கவலைகள் மறந்து வாழ்ந்த சில காலங்கள்
இவையெல்லாம் எம் மனதைவிட்டு நீங்காத நினைவுகள்
இப்படியாய் பண்பென்றும் பக்தி என்றும்
காலமெலாம் வாழ்ந்தவரே!
என்றென்றும் தெய்வமாய் எங்கள் மனங்களில்
நிறைந்தவரே நீங்கள் இன்னொரு பிறப்பெடுத்து
எம் குடும்பத்தில் பிறக்க எல்லாம் வல்ல
இறைவனை பிரார்த்திக்கின்றோம். நிஜங்களில்
உங்களோடு வாழ்ந்த அந்த நினைவழியா
நாட்களை எங்கள் மனங்களில் சுமந்தபடி வாழ்ந்து
வரும் உங்கள் குடும்பத்தினர்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*அன்புடன்*
**மதியழகன் குடும்பத்தினர்** *(ஜேர்மனி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனனே!

"குணத்தான்" இப்படித்தான நான் உன்னை அழைப்பேன் "டேய் அருமைத்துரை" என்று தான் நீ என்னை அழைப்பாய். சிறிய வயது முதல் நானும் நீயும் ஒரு தாய்ப்பிள்ளைகள் போல் ஆடிப்பாடி திரிந்த நாட்களை எண்ணிப்பார்க்கின்றோம்.
எதனையோ இழந்தது போன்று எம் மனம். அமைதி கொள்ள மறுக்கின்றது. எத்தனை மைத்துனர்கள் எனக்கு இருக்கின்றார்கள் அவர்களில் உரிமையுள்ள உயிரான மைத்துனராய் நீ திகழ்ந்தாய் குணத்தான். உருவத்தாலும் நாம் ஒன்றாய் இருந்தோமடா. நீயும் நானும் கருத்து முரண்பட்டு வாய்ச்சண்டை இட்ட காலங்களை இன்று என் உள்ளம் அசைபோட்டு பார்க்கின்றதடா. அவை என்னை கலங்க வைக்குதடா, நீ சொல்லும் அறிவுரைகள் இன்று என்காதில் ஒலிக்குதடா குணத்தான். வாழ்விடத்தில் நாம் இருவரும் பிரிந்தோமடா ஆனாலும் ஈரிரு மாதங்களுக்கு முன் என் வீட்டு முற்றத்தில் உன் அழகுக்கோலத்தை கண்டேனடா! நீ மறைந்த செய்தியை கேட்டு மனம்பதைக்க இயலாமையிலும் உன்னிடம் ஓடி வந்தேனடா உள்ளுணர்வு இழுத்து வர. குணம் என் மைத்துனனே எங்கு சேன்றாயோ!

"உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்"

*சபாபதி–அருமைத்துரை*
விஜயபதி,
பொலிகண்டி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் மாமாவே

வடமராட்சி மண் பெற்றெடுத்த மைந்தனே
வாழ்வில் சிகரம் தொட்டவரே - நல்
வண்ணம் கொண்டவரே - எமக்கு
வழிகாட்டி நின்றவரே

குன்றென வாழ்ந்தவரே - உம்
குறிக்கோள் தவறாதவரே
குவலயம் போற்ற வாழ்ந்தவரே - எம்
குறைகள் களைந்தவரே

ஐயாவின் தோழனே - எம்
அம்மாவின் நல்ல சோதரனே - உங்கள்
அன்புமுகம் கண்டு அம்மாவும் குதூகலிப்பார்
ஐயாவும் அகம் மகிழ்வார்

சோதியர் வளவின் சொத்தானவரே - எமக்கு
சோதனைகள் வந்தபோதும் காத்து நின்றவரே - இன்று
சோபனை இழந்து நிற்கின்றோம்
சொப்பன வாழ்வுதனை எண்ணி எம் குணமாமாவே.....

*மருமகன்*
**அருமைத்துரை அன்பழகன்**
*விஜயபதி*
*கூஷகூஷசோதியர்வளவு,பொலிகண்டி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி

நான் 1977ம் ஆண்டு பாராளுமன்றத்திற்கு தெரிவானதிலிருந்து நெருங்கி பழகிய ஒருவரான திரு.சி.என் துரைராஜா அவர்களின் மறைவினை கேள்வியுற்றதும் ஆழ்ந்த கவலை அடைந்தேன்.
இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் அங்கத்தவராக திரு.சி.என்.துரைராஜா அவர்கள் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை வென்றெடுக்கும் முகமாக பல்வேறு செயற்பாடுகளிலே பங்குபற்றியிருந்தார்.

திருகோணமலை நகரசபைக்கு இரண்டு முறை தெரிவு செய்யப்பட்டிருந்த திரு.துரைராஜா அவர்கள் ஒரு சமாதான நீதிவானுமாவார். இந்து சமய செயற்பாடுகளிலே ஆர்வமாக ஈடுபாடு கொண்டிருந்த திரு.துரைராஜா அவர்கள் மிக விசேடமாக திருகோணமலை ஸ்ரீ கற்பகப்பிள்ளையார் ஆலயத்தின் நடவடிக்கைகளிலே சிறப்பான பங்களிப்புகளை நல்கியிருந்தார்.
திருகோணமலையில் பல்வேறு சமூக கலாசார மற்றும் எழுத்தாக்க துறைகளில் ஈடுபாட்டுடன் செயற்பட்ட திரு.துரைராஜா அவர்கள் மிக அர்ப்பணிப்புடன் இந்த பணிகளில் ஈடுபட்டதன் நிமித்தம் அனைவரதும் நன்மதிப்பையும் மரியாதையும் பெற்றிருந்தது மாத்திரமன்றி இத்துறைகளில் பல்வேறு விருதுகளையும் பெற்றிருந்தார். இயற்கையாகவே மிகவும் அமைதியான சுபாவம் கொண்ட திரு.துரைராஜா அவர்கள் அனைவருடனும் மிக நட்புடன் பழகி அனைவராலும் மிகவும் மதிக்கப்பட்ட ஒருவருமாவார்.
இவரது இழப்பு அனைவருக்கும் பாரிய இழப்பாகும். இத்தருணத்தில் அன்னாரது குடும்பத்தினர் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரது ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**இரா சம்பந்தன்**
*தலைவர், தமிழ் தேசிய கூட்டமைப்பு*
*பாராளுமன்ற உறுப்பினர்.*
*திருகோணமலை.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை நகராட்சி மன்றம்
ත්‍රිකුණාමලය නගර සභාව
**TRINCOMALEE URBAN COUNCIL**

| தலைவர் | செயலாளர் | அலுவலகம் | |
|---|---|---|---|
| සභාපති | ලේකම් | කාර්යාලය | |
| Chairman | Secretary | Office | Fax No: |
| 026-2222074 | 026-2222275 | 026-2222275 | 0262220552 |

uctrinco@gmail.com


20.02.2019

அமரர் C.N துரைராஜா அவர்கள் 1979ஆம் ஆண்டு திருக்கோணமலை நகரசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். இவர் தனது தாய் மொழியாம் தமிழுக்கும் தனது தாய் பூமியான திருகோணமலைக்கும் பெரும் பணியாற்றியவர்.

இவர் இலங்கை தமிழரசுக் கட்சியின் ஆயுள்கால உறுப்பினராகவும், செயலவை உறுப்பினராகவும் இருந்து நம் மக்களுக்காக பங்காற்றியவர். அத்துடன் இவர் கற்பக பிள்ளையார் ஆலய புனரமைப்பிற்கும் பங்காற்றியவர்.

இவர் ஒரு சிறந்த கவிஞர். இவர் தந்தை செல்வாவுடனும் மறைந்த எமது தளபதி அண்ணன் அமிர்தலிங்கம் மற்றும் தலைவர்களுடன் மிக அன்னியோனிய உறவை பேணியவர்.

தனது மக்களுக்காக என்றும் சேவையாற்றிய என் நண்பன் எம்மை விட்டு பிரிந்தது எமக்கு மிகுந்த மனவேதனையை தந்தது.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கும் நண்பர்கள், உறவினர்களுக்கும் எனது இரங்கல்களை தெரிவிக்கின்றேன்.

திரு.சே.சிறீஸ்கந்தராஜா
உப தலைவர்,
நகரசபை,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய சமூகப்பணிகளில் சங்கமமான உணர்வுக் கவிஞன்

அமரர் திருவாளர் சி.என்.துரைராசா அவர்கள் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நீண்டகால உறுப்பினர். இக்கட்சியின் வளர்ச்சிக்காக அவர் ஆற்றிய பணிகள் ஏராளம். மாவட்டத்தில் இடம்பெற்ற சகல தேர்தல்களிலும் தமிழரசுக்கட்சியின் அமைப்பு ஒழுங்குகளை ஐயா சம்மந்தனின் வழிகாட்டலில் ஒருங்கிணைந்து தேர்தல் பணிகள் தொய்வின்றி நடைபெற உதவியவர்.

இலங்கைப் போக்குவரத்துச்சபை திருகோணமலை சாலையில் அலுவலராகப் பணியாற்றிக் கொண்டு இரவில் நீண்ட நேரம் அர்ப்பணிப்புடன் கட்சிப்பணிகளை ஏற்றுத் திறம்படச் செயற்பட்டவர்.

1979 – 1981 காலப்பகுதியில் திருகோணமலை நகரசபை உறுப்பினராகச் சேவை செய்தவர். அவர் ஆற்றிய சிறந்த சேவை காரணமாக 1983 இலும் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவர்.

1994ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐயா சம்மந்தரின் வேண்டுகோளிற்கு இணங்க வேட்பாளராக் களமிறங்கி கட்சியின் வெற்றிக்காக பல வழிகளிலும் உழைத்தவர்.

எல்லாவற்றிற்கும் மேலாக இவர் ஒரு தமிழ்ப்புலமை மிக்க சிறந்த கவிஞர். சமகால நாட்டு நடப்புகள் பற்றி இவர் எழுதிய கவிதைகள் பத்திரிகையில் வெளிவந்து பாராட்டுக்களைப் பெற்றிருக்கின்றன. இப்பகுதியில் உள்ள பல ஆலயங்களிற்கு ஊஞ்சற் பாடல்களையும், பக்திப் பாடல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

வரலாற்றுப் பெருமை மிக்க ஆலயங்களிலிருந்து வெளிவரும் சிறப்பு மலர்களில் அன்னாரின் கட்டுரைகள் சிறப்பிடம் பிடித்து மலரை மெருகூட்டிக் கொண்டிருப்பதையும் எம்மால் கூறாமல் இருக்கமுடியாது.

சமாதான நீதிவானாகிய இவருடைய சேவை கட்சியுடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. இவர் தொழில் புரிந்த இடத்திலுள்ள ஆலயத்தின் செயலாளராக, மாதுமையம்பாள் உடனுறை கோணேஸ்வரர் ஆலய நகர் ஊரவலசபை கணக்குப் பரிசோதகராக, செயலாளராக, அன்புவழிபுரம் கற்பகப்பிள்ளையார் ஆலய ஆலோசகராக என சமூக சமய சேவைகளையும் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட பெருமகன்.

2013இல் சாகித்திய விருதும், 2013இல், கலாபூஸணம் விருதும், 2015இல் வித்தகர் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்ட நிகழ்வுகள் வரலாற்றுப்பதிவுகள்.

***திரு. கே. துரைரட்ணசிங்கம்***
***பாராளுமன்ற உறுப்பினர்***
***கிழக்கு மாகாணம்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சி.என்.துரைராசா அவர்களின் நினைவு உரை

"தோன்றின் புகழோடு தோன்று இல்லாவிடின் தோன்றாமல் விடு" என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க வாழ்ந்து காட்டியவர் அண்ணன் துரை அவர்கள். இவர் ஆரம்பக் கல்வியை மடத்துக்கடவை கா.மாணிக்கம் தலைமை ஆசிரியரிடம் கற்றார். சிறந்த கவிதை கட்டுரையாளனாக விளங்கிய அமரர் துரை அண்ணன் தினக்குரல், சுடர் ஒளி தினசரிப் பத்திரிகைகளில் புனைபெயர் அன்பு ஊரான், பொலிகை மாறன், திருமலை கலைமாறன் என்னும் பெயர்களில் எழுதி வந்தார். அன்புவழிக் கிராமத்தில் 16 ஆண்டுகளை வசிப்பிடமாகக் கொண்டவர். அக்கிராமத்தின் அபிவிருத்திச் சங்கம், ஞானவைரவர் ஆலயம் என்பவற்றில் உறுப்பினராக இருந்து பல பணிகள் செய்த அண்ணன் துரைராசா அவர்களை அன்புவழி கிராம மக்கள் கலாபூஷணம் விருது பெற்றதும் பொன்னாடை போர்த்தி கௌரவம் செய்தார்கள். அமரர் துரை அண்ணனை 1979ம் ஆண்டு அரசியலில் திருமலை தமிழ் அரசுக்கட்சியின் தலைவர் கர்மவீரன் ஈழத்துநாதன் கொண்டுவந்து நகராட்சி மன்ற உறுப்பினர் ஆனார். தனது கொள்கையிலிருந்து தளம்பாமல் கட்சிக்காகப் பாடுபட்டவர். அரசியல் சாணக்கியன் சம்பந்தன் ஐயாவின் மதிப்புக்கும் நம்பிக்கைக்கும் உரியவராக செயல்பட்டவர். அன்னார் அன்புவழிபுரம் கிராமத்துக்காக பலவழிகளிலும் முன்னின்று உழைத்தவர். அமரர் துரை அண்ணாவின் ஆத்மா சாந்தியடைய கோணேசப் பெருமானை வேண்டுகிறோம்.

***இங்ஙனம்***

***அன்புவழிபுர மக்கள் சார்பாக***

**அ.கி.நலன்விரும்பி**

***கலைஞர் மாஸ்ரர் வெற்றிவேந்தன்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாபூஷணம் C.N.துரைராஜாவின் கலைவாழ்வின் ஒரு துளி

அன்புவழி நின்று அறம் காத்த துரைராஜா
அன்னைத் தமிழதனை அரவணைத்து சுகம் கண்டு
அழகழகாய் கவிதைகளை புனைந்து புகழ்தேடி
அரசரோடு சரிநிகராய் அமர்ந்துகொண்ட கவிஞன் நீ

தாடகைக் குளத்தினிலே தவழ்ந்து வரும் தென்றலென
தாமரை மலர்களொடு பிணைந்திருக்கும் எழிலினைப்போல் – கலை
தாகமதை தீர்ப்பதற்கு செந்தமிழை கவிதைபோல் கடைந்தெடுத்து
தாயகத்தில் தனக்கென ஓர்தடம் பதித்த தமிழ் கவிஞன்

கன்னித் தமிழதனை கனிவுடனே காதலித்து
கடல்கடந்து தமிழதனின் தாகத்தை வெளிப்படுத்தி
கலைஞரவர் கடைக்கண் பார்வையினால் மெருகுபெற்று
காவியம் படைத்தவரே கலாபூஷணம் – துரைராஜா.

கெஞ்சும் தமிழோ சலங்கையொலி – தமிழ்
கொஞ்சும் ஒலியோ குழந்தை மொழி
வஞ்சி மனதில் காதல் வலி – துரை
நெஞ்சமெலாம் தமிழ் கவிதை மொழி

பூத்துக் குலுங்கும் அழகுமலர் தலை சாய்ந்து
சொரியும் சுவைத்தேனை தேடி சாய்ந்து
சொரியும் சுவைத்தேனை தேடி அலையும் வடுவரியோ
அதை நாடி பருகி மயங்கியதே – நீர்
பாடிப் பாடி எழுதியவை கவியோ, கதையோ, காவியமோ
பார்த்து படித்து ரசித்தோரே உமை வாழ்த்தி
பொன் ஆடை போர்த்தி மகிழ்ந்தனரோ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய வாசலிலே தலைவணங்கி வலம் வந்து
ஆலய மணியதனை இசையோடு ஒலி எழும்பி
ஈசனக்கோர் திரு ஊஞ்சல் பாடலினை பண்ணோடு பரிந்தளித்து
நேசனாய் அவர் அசையும் அழகுதனை கண்டு நெகிழ்வீரே

பச்சை கிளியதுவும் கொச்சையாய் உம் தமிழ்பேசும்
இச்சை கொண்ட கருங்குயிலும் சத்தமாய் உம் கவிபாடும்
பிச்சையாய் பெற்றீரோ நாமங்களின் வித்தைகளை
பச்சிலை சிரஞ்சீவி பர்வதமோ நீர் வடித்த கவிதையெல்லாம்

திக்கெட்டும் பரவியதே உமது புகழ்
தித்திப்பாய் இனித்ததுவே உமது நடை
எத்திக்கு சென்றாலும் உமது பெயர்
என்னாளும் வாழ்த்திடும் இப்பூவுலகில்

கவிபடைத்த கலைஞனே காவியமாய் மாறியதேன்
காலமது வந்ததினால் காலனும் தேடி வந்தானோ
கோலமது மாறியதேன் குடிபெயர்ந்து போனதுமேன்
கலைப்பயணம் போது மென்று கரைநாடிச் சென்றீரோ
பொய்யுடல் நீர்த்துப் போனாலென்ன – உமது
புகழ் இப் பூவுலகில் என்றென்றும் நிரந்தரமே

அமரரவர் உறவெல்லாம் அமைதி பெற
அன்னாரின் ஆத்மாவும் சாந்தி பெற
அன்புவழி மக்களெல்லாம் ஒன்றிணைந்து
வைரவப் பெருமான் திருப்பாதம் தொழுதெழுவோம்

**உ.இராஜேஸ்வரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# C.N உம் ஸ்ரீகற்பகப்பிள்ளையாரும்

CN என சகலராலும் அழைக்கப்படும் C.N.துரைராசா அவர்கள் நீண்டகாலமாக எமது பிள்ளையார் ஆலயத்தோடு மிக நெருங்கிய ஈடுபாடு கொண்டு பெரும் தொண்டாற்றியவர்.

அவரின் தொண்டினை சொற்களால் விவரிக்க முடியாது இருப்பினும் அவரின் சேவை நீண்ட காலமாக காலை மாலை இருவேளைகளிலும் ஆலயத்தின் சுற்றுப்புறத்தை மிக நேர்த்தியாக கூட்டி துப்பரவு செய்வதிலும் ஆலயத்தினுள் இருக்கும் அசுத்தங்களை தனது பணிமூலம் அகற்றி நீண்ட காலமாக தொடர்பு கொண்டு இருந்தவர். இதையாரும் மறக்கமுடியாது.

மேலும் தான் ஒரு அரச கூட்டுத்தாபன ஊழியராக இருப்பினும் ஆலயத்தொண்டினை தினமும் மறக்காமல் செய்தவர். அவரின் நன்கொடை உபயமாக கிழக்கு பக்கமாக இருக்கும் அம்மன் ஆலயத்தின் மணி அடிக்கும் இருவேளையும் நாம் அவரின் நினைவாக ஞாபகப்படுத்திக்கொடே இருக்கும்.

அது மட்டுமல்ல திகோணமலை ஸ்ரீகற்பகப்பிள்ளையார் ஆலயத்தின் நீண்டகாலமாக செயலாளராக 1972ம் ஆண்டுதொடக்கம் 1998ம் ஆண்டுவரை பணிபுரிந்து மிகவும் சிறப்பான தொண்டினையும் நிர்வாகத்தையும் கொண்டு சென்ற பெருமை அன்னாரைச்சாரும்

CN அவர்கள் இதுமட்டுமல்லாமல் தான் பதவி வகித்த திருகோணமலை CTB சாலையிலும் ஒரு பிள்ளையார் ஆலயத்தை அமைத்து அதன் கும்பாபிஷேகத்தையும் நடாத்தி வைத்த பெருமதிப்பிற்குரியவர்.

மேலும் தான் சார்ந்த இனத்திற்கும் மக்களுக்கும் சேவை செய்வதையே குறிக்கோளாகக் கொண்டு திருகோணமலை நகராட்சி மன்றத்திற்கு உறுப்பினராகவும் பணியாற்றிய பெருமை உடையவர்

மேலும் சிவராத்திரி நகர் ஊர்வல குழுவின் உறுப்பினராகவும் போஷகராகவும் செயற்பட்டு பல அரிய தொண்டினை ஆற்றியவர்.

திருகோணமலை ஸ்ரீகற்பகப்பிள்ளையார் ஆலய நிர்வாகத்தில் பண நெருக்கடி மிகுந்த காலகட்டத்தில் இன்று சந்தியில் விளங்கும் நான்கு பெரிய கடையைக் கட்டிவித்து அதன் வருமானம் கோயிலின் பரிபாலனத்திற்கு உதவிட அவரின் பங்களிப்பு மிகவும் வேண்டியதாக இருந்தது.

அவரின் புகழ் என்றும் மக்களால் மறக்கமுடியாதபடி இறுதிக் காலத்திலும் ஒரு சமாதான நீதவானாக தொண்டாற்றியவர்.

*இங்ஙனம்*

**ந.சிவனேசலிங்கம்**

***சமாதான நீதிவான் (மத்தியஸ்த சபை)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரை என்னும் தூய நண்பர்

துரை என்னும் தூய உள்ளம் படைத்த நண்பரை நான் சந்தித்த நாள் முதல் இறக்கும் வரை நண்பராக மட்டுமல்லாது உற்ற சகோதரன் போலவே என்னுடன் உறவை வைத்துக்கொண்டார்.

துரை வாழ்ந்த காலத்தில், சமய, கலை கலாசாரம் அரசியல், சமூக சேவைகளில் ஈடுபட்டு உயர்வான ஒரு அந்தஸ்தை வளர்த்துக் கொண்டவர்.

*சமய ஈடுபாடு*

திருஞானசம்பந்தர் வீதியில் வாழ்ந்த காலத்தில் அருகில் உள்ள கற்பகப்பிள்ளையார் ஆலயத்தின் செயலாளராக நீண்டகாலம் பணியாற்றி ஆலய வளர்ச்சிக்காக ஈடுபாட்டோடு உழைத்தார். பின் அன்புவழிபுரம் சென்றும் அங்கு வைரவர் கோவிலின் செயலாளராகவும் பணியாற்றி ஆலய வழிபாட்டுடன் ஆலய வளர்ச்சிக்காகவும் பாடுபட்டு உழைத்தவர். சமயம் சம்பந்தமான கட்டுரைகளையும் பத்திரிகைகளில் எழுதி வாசகர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

*கலை ஈடுபாடு*

கலையில் சிறுவயதில் பாடசாலை காலங்களில் நாடகங்களில் நடித்ததாக எனக்குக் கூறுவார். கவிதைகள் எழுதுவதிலும் வல்லவராக இருந்தவர். கவியரங்குகளில் பங்குபற்றி நன் மதிப்பைப் பெற்றவர். அவரது கலைகலாச்சார சேவைகளின் மூலம் உயரிய விருதான கலாபூஸணம் பட்டத்தைப் பெற்றதன் மூலம் உயரிய அந்தஸ்தைப்பெற்றார்

*அரசியல் ஈடுபாடு*

1965ம் ஆண்டு முதல் தந்தை செல்வாவின் ஆசியுடன் தமிழரசுக்கட்சியின் உறுப்பினராகி கட்சியின் திருகோணமலைக் கிளையின் வளர்ச்சியின் பெரும்பங்காற்றியவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979ம் ஆண்டு திருக்கோணமலை நகரசபையில் திருக்கோணமலை தமிழர் விடுதலைக்கூட்டணியில் போட்டியிட்டு நகரசபைக்குத் தெரிவாகி மக்கள் தொண்டாற்றிப் பாராட்டுப்பெற்றார்.

*சமாதான நீதிவான் பதவி*

தமிழர் விடுதலைக் கூட்டணியில் அளப்பெரிய சேவையை பாராட்டி தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் துரைக்கு சமாதான நீதவான் பதவி வழங்கிக் கௌரவித்தார். சமாதான நீதவான் பதவி கிடைத்த நாள் முதல் இறப்பு வரை இரவு பகலாகத் தன்னைத் தேடிவந்த பொதுமக்களுக்கு மனம் கோணாது சேவை செய்து மக்கள் மனதில் இடம்பிடித்தார்.

*அகதி வாழ்க்கை*

1990 ஆம் ஆண்டில் அகதியாக இந்தியா சென்றபோதும் ;கலைஞர் கருணாநிதி ஐயாவின் பத்திரிகையில் ;அகதிகள் அவலத்தை எடுத்துக்கூறி கட்டுரை எழுதி கலைஞர் கருணாநிதி ஐயாவின் பாராட்டையும் புகழையும் பெற்றார்.

துரை, எழுபத்தாறு வயதில் இறைவன் பாதம் சேர்ந்தார் அன்னாரின் பிரிவின் போது கண்ணீர் விட்டு அழுது நன்றியைச் செலுத்த வாய்ப்புக்கிடைத்ததைப் பேறாகக் கருதுகிறேன்.

துயரினால் வாடும் மனைவி மக்கள், பேரப்பிள்ளைகள் குடும்ப உறவினர்கள் யாவருக்கும் நண்பரான எனது ஆழ்ந்த அனுதாபங்களை நன்றியுடன் தெரிவித்துக்கொள்ளுவதோடு அன்னாரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கிறேன்.

*துயரில் வாடும் நண்பர்*
**சி.சச்சிதானந்தவேல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவரின் வார்த்தைகளின் குணம் அத்தானின் சாதிப்புகழ்

"பணிவுடையன் இன் சொல்லனாதல்
ஒருவர்க்கு அணியல்ல மற்றுப்பிற"

என்ற வான்புகழ் வள்ளுவப் பெருந்தகையின் கூற்றுக்கிணங்க குணம் அத்தானுக்கு அணி சேர்ப்பது அவரது பணிவும் இனிமையான சொல் பேசுவதுமே ஆகும்.

கற்றவர் மற்றவர் என்றில்லாமல் தன்னை உற்றவர், உறவினர் என்ற பேதங்கள் பாராது எவரையும் இன்முகத்துடன் நோக்கிய புன்சிரிப்பில் புன்னகை செய்து பணிவான வார்த்தைகளைப் பேசும் அவருடைய அழகுமுகம் அவருடன் பழகிய அனைவரது இதயத்திலும் மரும்தினம். பணிவுக்குள் உறைந்திருக்கும் அவருடைய துணிவு அளப்பெரியது

*"சாலம் பற்றி சார்பில செய்யார்*
*மாசற்ற குலம்பற்றி வாழ்வதும் என்பார்"*

என வாழ்ந்து, வாழ்க்கையில் முன்னுக்கு வந்த ஒரு உத்தமர்.

வானத்துச் சந்திரன் வையகத்துக்கு ஒளி கொடுப்பது போல் எம் குணம் அத்தான் இம்மண்ணிலுள்ள உறவுகளுக்கு ஒளிபரப்பி உயர்ந்தவர்.

*"பெருமையுடையவர் ஆற்றுவார் ஆற்றின்*
*அருமை உடைய செயல்"*

என்பதற்கிணங்க சமூக சேவை, ஆலயத்திருப்பணிகள், அரசியல் சேவை, குடும்பச் சேவை என பல பணிகள் புரிந்து தனக்கென மட்டும் வாழாது அற்றவர், உற்றவர் உறவினர் என பலருக்கும் உதவியதால்

*"குற்றமில்லாதன குடிசெய்து வாழ்வானைச்*
*சுற்றமாய்ச் சுற்றும் உலகு"*

என உறவுக் கூட்டமே குணம் அத்தானை புடை சூழ்ந்து நின்றது. கருங்கல் சிதறுமே அன்றி வளையாது. கண்ணாடி நொருங்குமே அன்றி நெளியாது என வாழ்ந்து முடித்தவர் எங்கள் குணம் அத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது இறுதி ஊர்வலத்தை யோசிக்கின்ற போது மனம் பூசிக்கின்றது. வள்ளுவரின் வாய்மொழியில் ஒன்றை மாற்றி அமைத்தால் என்னவென்று

*"தோன்றிற் புகழொடு தோன்று..."*

என்பதை

*"மடியில் புகழோடு மடி அன்றெனில்*
*மடியாமை நன்று"*

என யோசிக்கத் தோன்றுகிறது. எழுபத்தாறு வயதுக்குள்ளே முத்தான வாழ்வு வாழ்ந்த எங்கள் சொத்தான குணம் அத்தானின் ஆத்மா சாந்திபெற இறைவன் பாதக்கமலம்தனை பணிந்து வேண்டுகிறோம்.

"வியர்வைகள் நனைத்து....
தாகங்கள் வளர்த்து....
விண்மீன்கள் வளைக்கத்
துடித்த வித்தகன் - நீ!"

**மா. மதியழகன் (ஆசிரியர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# G.C.E. (O/L) க்குத் தேவையான
# கேத்திர கணித தேற்றங்கள்




**Power Institute of MATHS**
23. Sivan Street, Trincomalee.
077 2975953

C.N. துரைராஜாவின் மகன்
**Mr. T. Kumanan**

---


01. கோணங்களின் வகைகள்.

கூர்ங்கோணம்




$0 < \theta < 90^\circ$

செங்கோணம்





$\theta = 90^\circ$

விரிகோணம்





$90^\circ < \theta < 180^\circ$

நேர்கோணம்




$\theta = 180^\circ$

பின்வளை கோணம்




$180^\circ < \theta < 360^\circ$

02. இரு கோணங்களின் கூட்டுத்தொகை $90^\circ$ எனின் அவற்றுள் ஒன்று மற்றையதன் நிரப்பு கோணம் எனப்படும்.

$$a + b = 90^\circ$$

03. இரு கோணங்களின் கூட்டுத்தொகை $180^\circ$ எனின் அவற்றுள் ஒன்று மற்றையதன் மிகைநிரப்பு கோணம் எனப்படும்.


$$a + b = 180^\circ$$

04. நேர் கோடு ஒன்றில் அடுத்துள்ள கோணங்களின் கூட்டுத்தொகை இரு செங்கோணங்களாகும். $(180^\circ)$




$x + y = 180^\circ$

05. ஒரு புள்ளியை சுற்றியுள்ள கோணங்களின் கூட்டுத்தொகை $360^\circ$ ஆகும்.




$a + b + c = 360^\circ$

06.




$a = b$
$c = d$


இரண்டு நேர்கோடுகள் ஒன்றையொன்று வெட்டும் போது உண்டாகும் குத்தெதிர் கோணங்கள் சமனாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


07. இரு சமாந்தர நேர்கோடுகளை ஒரு குறுக்குக்கோடு வெட்டும் போது உண்டாகும்.

1. ஒத்த கோணங்கள் சமன்





$a=q,\ d=r,\ b=p,\ c=s$

2. ஒன்றுவிட்ட கோணங்கள் சமன்




$a=b,\ x=y$

3.





$a + b = 180^\circ$

$m + n = 180^\circ$


நேயக்கோணங்களின் கூட்டுத்தொகை $180^\circ$

08. முக்கோணிகளை ஆறு வகையாக பிரிக்கலாம்.


கூர்ங்கோண முக்கோணி




விரிகோண முக்கோணி




இருசமபக்க முக்கோணி




செங்கோண முக்கோணி




சமபக்க முக்கோணி



சமனில் பக்க முக்கோணி




09. ஒரு முக்கோணியின் அகக்கோணங்களின் கூட்டுத்தொகை $180^\circ$ ஆகும்.




$a + b + c = 180^\circ$

10. ஒரு முக்கோணியின் புறக்கோணம் அதன் அகத்தெதிர் கோணங்களின் கூட்டுத்தொகைக்கு சமனாகும்.





$x = a + b$




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. ஒரு முக்கோணியின் மூன்று பக்கங்களும் முறையே இன்னுமொரு முக்கோணியின் மூன்று பக்கங்களுக்கும் சமனாயின் அவ்விரு முக்கோணியும் ஒருங்கிசையும்.





$\Delta PQR \equiv \Delta MNO$
(ப.ப.ப)

12. ஒரு முக்கோணியின் இரு பக்கங்களும் அவற்றின் அடைகோணமும் முறையே இன்னுமொரு முக்கோணியின் இரு பக்கங்களுக்கும் அடை கோணத்திற்கு சமனாயிருப்பின் அவ்விரு முக்கோணியும் ஒருங்கிசையும். (ப.கோ.ப)





$\Delta PQR \equiv \Delta xyz$
(ப.கோ.ப)

13. ஒரு முக்கோணியின் இரு கோணங்களும் ஒரு பக்கமும் வேறொரு முக்கோணியின் இரு கோணங்களுக்கும் ஒத்தவொரு பக்கத்திற்கும் சமனாயின் அவ்விரு முக்கோணிகளும் ஒருங்கிசையும். (கோ.கோ.ப)





$\Delta ABC \equiv \Delta xyz$
(கோ.கோ.ப)

14. ஒரு செங்கோண முக்கோணியில் செம்பக்கமும் ஒரு பக்கமும் முறையே இன்னுமொரு செங்கோண முக்கோணியின் செம்பக்கத்திற்கும் ஒரு பக்கத்திற்கும் சமனாயின் அவ்விரு முக்கோணியும் ஒருங்கிசையும். (செ.ப.ப)




$\Delta PQR \equiv \Delta MNO$
(செ.ப.ப)


15. பெரிய பக்கத்திற்கு எதிரேயுள்ள கோணம் பெரிய கோணம். சிறிய பக்கத்திற்கு எதிரேயுள்ள கோணம் சிறிய கோணம்.




$AB < AC < BC$ எனின்

$\hat{C} < \hat{B} < \hat{A}$

16. சமனான பக்கத்திற்கு எதிரேயுள்ள கோணங்கள் சமன்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. பல்கோணியொன்றின் அகக்கோணங்களின் கூட்டுத்தொகை சமனாகும். (n = பக்கம்) $180\,(n-2)$

18. ஒழுங்கான பல்கோணியின் ஒரு அகக்கோணத்தின் பருமன். (n = பக்கம்) $\frac{(n-2)\,180^\circ}{n}$

19. ஒழுங்கான பல்கோணியின் ஒரு புறக்கோணத்தின் பருமன். (n = பக்கம்) $\frac{360}{n}$

20. எந்தவொரு பல்கோணியினதும் புறக்கோணங்களின் கூட்டுத்தொகை $360^\circ$ ஆகும்.





$x + y + z = 360^\circ$





$a+b+c+d+e = 360^\circ$

21. ஒரு பல்கோணியின் ஒரு உச்சியிலுள்ள அகக்கோணம் + புறக்கோணம் = $180^\circ$ ஆகும்.





$a + b = 180^\circ$

22. ஒரு செங்கோண முக்கோணியின் செம்பக்கத்தின் வர்க்கம் ஏனைய இரு பக்கங்களின் வர்க்கங்களின் கூட்டுத்தொகைக்குச் சமனாகும்.





$AB^2 + BC^2 = AC^2$

23. ஒரு முக்கோணியின் இரு பக்கங்களின் கூட்டுத்தொகை மூன்றாம் பக்கத்திலும் பெரியதாகும்.




$PQ + PR > QR$
$PQ + QR > PR$
$QR + PR > PQ$

24. ஒரு இணைகரத்தின் எதிர்ப்பக்கங்கள் ஒன்றுக்கொன்று சமனாகும்.





$AB = DC$
$AD = BC$

25. ஒரு இணைகரத்தின் எதிர்க்கோணங்கள் ஒன்றுக்கொன்று சமனாகும்.




$D\hat{A}B = D\hat{C}B$
$A\hat{D}C = A\hat{B}C$

26.





$AO = CO$
$BO = DO$

ஒரு இணைகரத்தின் மூலைவிட்டங்கள் ஒன்றை ஒன்று இரு சமகூறிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


27. ஒரு இணைகரத்தின் மூலை விட்டம் அதன் பரப்பளவை இரு சமகூறிடும்.




பரப்பு


$\Delta ABD = \Delta DCB$

28.





சாய்சதுரத்தின் மூலை விட்டங்கள் ஒன்றையொன்று செங்கோணத்தில் இருசமகூறிடும்.

29. ஒரு சோடி எதிர்ப்பக்கங்கள் ஒன்றுக்கொன்று சமனும் சமாந்தரமுமாயின் அது ஒர இணைகரம் ஆகும்.





30. ஒரு முக்கோணியின் இரு பக்கங்களுடைய நடுப்புள்ளிகளைத் தொடுக்கும் நேர்கோடு மூன்றாம் பக்கத்திற்கு சமாந்தரமாகவும் அதன் அரைப்பங்காகவும் இருக்கும்.




(i) $xy = 1/2\ BC$


(ii) $xy \parallel BC$

31. ஒரு முக்கோணியின் ஒரு பக்கத்தினது நடுப்புள்ளியினூடாக வேறொரு பக்கத்திற்கு சமாந்தரமாக வரையப்படும் நேர்கோடு மூன்றாம் பக்கத்தை இரு சமகூறிடும்.




$Ax = Bx,\ xy \parallel BC$ எனின் $Ay = Cy$


32. சமாந்தர கோடுகளுக்கு இடையே ஒரே அடியைக் கொண்டு அமைக்கப்படும் முக்கோணங்களின் பரப்பளவுகள் சமனாகும்.




பரப்பு

$\Delta ABC = \Delta ABD$


33. சமாந்தர கோடுகளுக்கு இடையே ஒரே அடியை கொண்டு அமைக்கப்படும் இணைகரத்தின் பரப்பளவுகள் சமனாகும்.




பரப்பு

$\square ABCD = \square ABMN$

34. சமாந்தர கோடுகளுக்கு இடையே ஒரே அடியைக் கொண்டு அமைக்கப்படும் முக்கோணியின் பரப்பளவு இணைகரத்தின் பரப்பின் அரைப்பங்காகும்.





பரப்பு

$\Delta ABM = 1/2\ \square ABMN$




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. ஒரு முக்கோணியின் ஒரு பக்கத்திற்கு சமாந்தரமாக வரையும் கோட்டினால் எஞ்சிய இரண்டு பக்கங்களும் விகிதசமனாகப் பிரிக்கப்படும்.





$xy \parallel BC$ எனின் $\frac{Ax}{Bx} = \frac{Ay}{Cy}$

36. ஒரு நேர்கோடு முக்கோணியொன்றின் பக்கங்களை விகிதசமனாகப் பிரிக்குமாயின் அந்நேர்கோடு எஞ்சிய பக்கத்திற்குச் சமாந்தரமாகும்.





$\frac{AM}{BM} = \frac{AN}{CN}$ எனில் $MN \parallel BC$

37. இரண்டு முக்கோணிகள் சமகோணமுடையவை ஆயின் அம்முக்கோணிகளின் ஒத்த பக்கங்கள் விகிதசமமானவை ஆகும்.




$\frac{BC}{xz} = \frac{AC}{xy} = \frac{AB}{zy}$

38. ஒரு முக்கோணியின் மூன்று பக்கங்களும் இன்னுமொரு முக்கோணியின் மூன்று பக்கங்களுக்கும் விகித சமனாகுமாயின் அவ்விரண்டு முக்கோணிகளும் இயல்பொத்த முக்கோணிகளாகும்.





$\frac{AB}{QR} = \frac{AC}{PQ} = \frac{BC}{PR}$ எனில்

$\hat{C} = \hat{P}, \hat{B} = \hat{R}, \hat{A} = \hat{Q}$

$\Delta ABC, \Delta PQR$ என்பன இயல்பொத்தவை


39. ஆரைகள் சமனெனின் அவற்றுக்கு எதிரே உள்ள கோணங்கள் சமன்.




$OA = OB$ எனின்

$O\hat{A}B = O\hat{B}A$

40.





$OM \perp AB$

$AM = BM$

மையத்திலிருந்து ஒரு நாணுக்கு வரையப்படும் செங்குத்து அந்நாணை இருசமகூறிடும்.

41. மையத்திலிருந்து சம அளவுள்ள தூரத்திலுள்ள நாண்கள் சமனாகும்.





$OM = ON$ எனில்

$AB = CD$




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. ஒரு வட்டத்தின் வில் அவ்வட்டத்தின் மையத்தில் எதிரமைக்கும் கோணம் பரிதியில் எஞ்சிய பாகத்தில் யாதுமொரு புள்ளியில் எதிரமைக்கும் கோணத்தின் இரு மடங்காகும்.




$A\hat{O}B = 2A\hat{C}B$

43.





$A\hat{D}B = A\hat{C}B$

$D\hat{A}C = D\hat{B}C$

ஒரே வட்டத்துண்டக் கோணங்கள் சமனாகும்.


44. அரைவட்டக் கோணம் செங்கோணமாகும்.




$AB$ விட்டம் எனில்,

$A\hat{C}B = 90^\circ$

45.





$\hat{p} + \hat{r} = 180^\circ$

$\hat{q} + \hat{s} = 180^\circ$


ஒரு வட்ட நாற்பக்கலின் எதிர்க்கோணங்கள் மிகை நிரப்பியாகும்.

46. வட்ட நாற்பக்கலின் ஒரு பக்கத்தை நீட்ட உண்டாகும் புறக்கோணம் அதன் அகத்தெதிர் கோணத்திற்குச் சமனாகும்.




$\hat{x} = \hat{y}$

47. ஒரு வட்டத்தின் மீதுள்ள ஒரு புள்ளியினூடாக ஆரைக்குச் செங்குத்தாக வரையப்பட்ட கோடு வட்டத்தின் தொடலி ஆகும்.





**OM = AB** எனில்
**AB** தொடலியாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


48. ஒரு வட்டத்தின் மீதுள்ள ஒரு புள்ளியி
வரையப்பட்ட தொடலி, தொடுபுள்ளியி
வரைந்த ஆரைக்குச் செங்குத்தாகு




$AB$ — தொடலியாயின்

$O\hat{M}B = 90^0$

49. வெளிப்புள்ளியிலிருந்து வட்டத்திற்கு வரையப்பட்ட இரண்டு தொடலிகள் சமனாகும்.





(i) $AB = AC$

(ii) $B\hat{A}O = C\hat{A}O$

(iii) $A\hat{O}B = A\hat{O}C$

(iv) $\Delta ABO \equiv \Delta ACO$

50. ஒரு வட்டத்திற்கு வரையப்பட்ட தொடலிக்கும் தொடுபுள்ளியில் வரைந்த நாணுக்கும் இடையிலுள்ள கோணம் ஒன்றுவிட்ட வட்டத்துண்டத்தில் அந்நாணினால் எதிரமைக்கப்படும் கோணத்திற்குச் சமனாகும்.




$B\hat{C}N = C\hat{A}B$

$M\hat{C}A = C\hat{B}A$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் குடும்பத்தின் நாயகர் எம்மை எல்லாம் மீள முடியா துயரில் மூழ்கவிட்டு மீளாத் துயில் கொண்ட செய்திகேட்டு நேரில் வந்து ஆறுதல் வார்த்தை கூறியவர்கள், தொலை பேசிமூலம் தொடர்பு கொண்டு அனுதாபம் தெிவித்தவர்கள், பத்திரிகை, அஞ்சலிப் பிரசுரங்கள், பதாதைகள், மலர் வளையங்கள் மூலம் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோர், சமூக வலைத்தளங்கள், தந்திகள் மூலம் அனுதாபம் தெரிவித்தோர், நோய் வாய்ப் பட்டிருந்த வேளை வந்து ஆறுதல் கூறியோர், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியோர், இறுதிப் பயணத்தில் கலந்து கொண்டோர், அன்றையதினம் பலவழிகளில் உதவிகள் புரிந்த உறவினர்கள், நண்பர்கள், அந்தியேட்டி நிகழ்வு, வீட்டுக்கிருத்திய நிகழ்வு, நினைவுப்பேருரை நிகழ்வு என்பவற்றில் கலந்து ஆத்ம ஈடேற்றத்தில் பங்கு கொண்டோர், இந்த மலருக்குரிய அஞ்சலியுரை மற்றும் ஆக்கங்களை தந்துதவியோர், மலரை ஆக்கியோர் அனைவர்க்கும் எமது உளங்கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.



இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப வி

நடராசா
+
செல்லமுத்

துரைராஜா
+
இராசகுமாரி

விவேகானந்தன்
(அமரர்)

தர்மகுலசிங்கம்
+
சந்திரா

விஜய
+
பரமா

மங்களநாயகி
+
மதியழகன்

வைசாலி
விஷாலி

குணராஜா
+
மரிய கியூரி

திலக்ஷனா
லகீஷா

ஜெயந்தி
+
விமலதாஸ்

ஷர்வேள்
ரஷ்வேள்

பத்ம
+
ரெஜி

அபிம
அனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ம்ப விபரம்

நடராசா
+
செல்லமுத்து

விஜயலஷ்சுமி
+
பரமநாதன்

மகேந்திரன்
+
குமுதா

யோகலஷ்சுமி
+
விஜயரட்ணம்

பத்மராஜா
+
ரெஜிதேவி

அபிமனுஷா
அனுஷரன்

பாரதிராஜா
+
சுகந்தி

தனுவர்ஷா

நிருசிதா
+
சுரேஸ்குமார்

கௌரிதரன்
+
சிந்துஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சி. என். துரைராஜா

169/2,
திருஞானசம்பந்தர் வீதி,
திருகோணமலை,
இலங்கை.




### எங்கே போகின்றோம்

செந்தமிழன் ஆண்ட பூமி
சிவந்து கிடப்பதுதான் ஏன்
வந்தவரும் எம்மை பார்த்து
வசை பாடும் நிலை
சொந்த சகோதரர் நம் மண்ணில்
சூழ்ச்சிக்கே அடி பணிந்தார்
இந்த நிலை என்று தான் மாறும்
இருளகன்று விடியும் நாள் எப்போது

கொல்லை வழி சென்றே
கோள் சொல்லும் கூட்டம்
இல்லை இனி நம்மில்
எல்லோரும் ஒரு தாய் மக்கள்
சொல்லும் நாள் வந்தால்
துரோகிகள் அழிந்து ஒழிவர்
வில்லை வளைத்து நிற்கும்
வீரர்களுக்கு இடம் கொடுப்போம்

பஞ்சம் பசி பிணி
பாரினில் அகதிகள் கூட்டம்
கொஞ்சம் சிந்தித்தல்...
கோடரிக் காம்புகளாம்
தஞ்சம் புகுந்தோர் வாழ்வில்

...கள் செய்தல் முறையோ
...சை கொடுத்தேனும்
...வரை அழித்து விடலர்மே,

ஆட்டம் காணும் கட்டிடம்
...படுத்தும் தலைவர்கள்
...ட்டம் கண்டு சிரிக்கும்
...தனமான மனிதர்கள்
கூட்டம் போட்டு நாளும்
கொக்கரித்து திரியும் கோழி
ஓட்டம் காண வைப்போம்
ஒரு நொடிப்பொழுதும் இல்லா

தகிடு தத்தம் போடும்
தலைவர்கள் இருக்கும் வரை
சொல்லமுடியுமா மாணவர்
துயரம் என்று நீங்கும்.

❖ ❖ ❖


**Mathuran Graphics & Offset Printers - Alvai. 0776688318, 021 226 3099.**
**e-mail :- mathurangraphics@gmail.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org